தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் Eco Club

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இளங்கலை ஆற்றல் & சுற்றுச்சூழல் பொறியியல் துறை மாணவர்களால் ECOFEST'15 "Envisioning feasibility" என்ற நிகழ்வானது செப்டம்பர் 16, 2015 அன்று ஏற்பாடு செய்யப்படவுள்ளது. ECOFEST'15 ஒன்பதாவது தேசிய அளவிலான மாநாடானது கல்லூரி பேராசிரியர்களின் வழித்துணை மற்றும் துணை வலுவுடன் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு முனைவர்.சி.திவாகர் துரைராஜ், முதன்மையர் (பொறியியல்),வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அவர்கள் தலைமைப் பொறுப்பு வகிக்கிறார். மேலும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக டாக்டர். ஆர். மகேந்திரன், உதவிப் பேராசிரியர் அவர்களின் வழித்துணை மற்றும் மன்ற ஆலோசகராக டாக்டர். ஏ. சுரேந்திரக்குமார் அவர்களின் செயல் நோக்கமளித்தலுடன் நடத்தப்படவுள்ளது. ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் இடையூறுகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவிலான மாநாட்டிற்கு முன்னதாக பல முன்னோட்ட நிகழ்வுகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும்.

ECOFEST'15–ன் முதல் நிகழ்நிரலாக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆகஸ்ட் 16, 2015 அன்று கழிவு சேகரிப்பு தொட்டிகள் மற்றும் TNAU வரைபடம் பொருத்துதலை உள்ளடக்கும் விதமாக Eco club ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் துவக்க விழாவானது வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன விரிவுரை அரங்கில் நடத்தப்பட்டு, நுழைவாயிலில் TNAU டிஜிட்டல் அமைப்பு வரைபடம் பொருத்தப்படவிருக்கிறது.

மேலும் மென்னயமுள்ள இரும்பினால் உருவாக்கப்பட்ட0.5 டன் மற்றும் 0.3 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுத் தொட்டிகள் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உள்ளும் சுற்றியுள்ள இடங்களிலும் வைக்கப்படவுள்ளன. இது மக்களின் குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை தடுப்பதற்கான மாணவர்களின் திடமேலாண்மைக்கு உதவும் வகையில் வண்ணங்களிடிக்கப் பெற்றுள்ளது.

Eco club–ன் முதன்மைக் குறிக்கோள்கள்:

- வளாகத்தைச் சுற்றியுள்ள இடங்களில் இரசாயன பாட்டில்கள் மற்றும் மட்காத குப்பைகளின் முறையான அப்புறப்படுத்தல்
- வளங்குன்றா ஆற்றல் பயன்பாடுகளான உயிர் எரிவாயு கூடம் மற்றும் சூரியசக்தி உபயோக சாதனங்களை வளாகத்தில் தொடர்ந்து பராமரித்தல்
- உலக சுற்றுச்சூழல் தினம், உலக தண்ணீர் தினம், உலக ஓசோன் தினம், இயற்கை பாதுகாப்பு தினம் மற்றும் ஆற்றல் பாதுகாப்பு வாரம் போன்றவற்றை பலநிகழ்வுகளின் மூலம் கொண்டாடுதல்
- மக்களிடம் பசுமை சுற்றுப்புறத்திற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் மரம் நடுதலின் மூலம் உலக வெப்பமயமாதலை குறைத்தல்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்